அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில் ஆழ்வார்திருநகரி

ஏரல் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்

ஸ்ரீ ஆதிநாதாய நம :

திருவைகாசி திருஅவதார

திருவிழா அழைப்பிதழ்

1434 பசலி

31/05/2025முதல் 09/06/2025 முடிய

ஐந்தாம் திருநாள் 04/06/2025

தேரோட்டம் : 08/06/2025

ஸ்ரீமதே ராமானுஜாய நம ஸ்ரீமதே சடகோபாய நம ஸ்ரீ மத் வரவரமுநயே நம

அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில் - ஆழ்வார்திருநகரி

உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்
திருவாய்மொழிக்கொப்பு? தென்குருகைக்குண்டோ
உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்? உண்டோ
ஒருபார் தனிலொக்குமூர்

நாட்கமழ் மகிழ்மாலை மார்பினனாகிய மாறன் சடகோபன் திருக்குருகூராகிய ஆழ்வார்திருநகரியில் காரியாருக்குப் புதல்வராய் தோன்றி கருவிலே திருவுடையராய் திருப்புளியினடியில் தவமிருந்து மாண்புடைய மதுரகவியாழ்வாருக்குத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழிகளைத் திருவாய்மலர்ந்தருளி அவாவற்று வீடுபெற்ற பின்பு மதுரகவியாழ்வாரால் கோயில் கொண்டருளப் பெற்று ஆண்டுதோறும் திருவைகாசித் திருவிசாகத்தில் திருநக்ஷத்திர உத்ஸவம் கண்டருள பத்துநாள் உத்ஸவம் நடைபெற்ற வண்ணம் இவ்வாண்டில் நிகழும் 1200 ஆம் ஆண்டு விசுவாவசு வருடம் வைகாசி மாதம் 15 ஆம் தேதி (29/05/2025) வியாழக்கிழமை தொடங்கும் இத்திருவிழாவில் வைகாசி மாதம் 17 ஆம் தேதி (31/05/2025) சனிக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் 8.15 மணிக்குள் மிதுன லக்கனத்தில் த்வஜாரோஹணம் நடைபெறும்.

வைகாசி மாதம் 21 ஆம் தேதி (04/06/2025) புதன்கிழமை 05ம் திருநாள் அன்று காலை 9.00 மணிக்கு நவதிருப்பதி எம்பெருமான்கள் மங்களாசாசனமும் இரவு 9.00 மணிக்கு நவதிருப்பதி எம்பெருமான்கள் கருட சேவையும் இவ்விழாவின் தனிச்சிறப்பாகும்.

ஐந்தாம் திருவிழாவில் உண்ணும்சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்றிருக்கும் இவரை விடமாட்டாதே தாங்களே அனுபவிக்க ஆசைகொண்டு நவதிருப்பதிகளிலும் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்கள், ஆழ்வாருடைய அருளிச் செயல்களில் முதலாவதான திருவிருத்தத்தில் "மெய்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்கிற பாசுரத்தைக் கேட்கும் அவாவுடன் ஆழ்வாரைக்கண்டு அருள்புரிய ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளி காலையில் ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்று, இரவில் கெருடாரூடராய் சேவையளித்து திருவீதி எழுந்தருளி திருவந்திக்காப்புக்குப் பிறகு திரும்பவும் பல்லக்கில்எழுந்தருளி நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்று விடைபெறும் சேவையும், பிறவற்றையும் பக்தகோடிகள் அனைவரும் வந்து கண்டுகளித்து, உண்டியல் காணிக்கை செலுத்தி, எம்பெருமானைச் சேவித்து அவன் கிருபைக்குப் பாத்திரராகும்படி அன்புடன் அழைக்கிறோம்.

சு. கணேசன்
அறங்காவலர் குழுத் தலைவர்

சு. சதீஷ்
செயல் அலுவலர்

அறங்காவலர் குழு உறுப்பினர்கள் : **ச. காளிமுத்து, A. ராமலட்சுமி, செ. செந்தில்குமார்,சீ. கிரிதரன்**

வைகாசி மாதம் 15 ஆம் தேதி (29-05-2025) வியாழக்கிழமை

திருமுளைச்சாற்று ஸ்ரீ கூரத்தாழ்வான் சன்னதியிலிருந்து

தேங்காய் வாங்கி வந்து

மாலை 5:00 மணிக்கு மேல் 6:15 மணிக்குள்

தேங்காய் சாற்றுதல்

வைகாசி மாதம் 16 ஆம் தேதி (30-05-2025) வெள்ளிக்கிழமை

மாலை 6:00 மணிக்கு

ஆழ்வார்திருநகரி ஸ்ரீமதுரகவியாழ்வார்

தங்கதோளுக்கினியான் திருவீதி எழுந்தருளல்.

திருவிழா உபயதாரர்

திரு. நம்பிக்கோனார் ஞாபகார்த்தம் பேரன்

திரு. ஆதிநாராயணன்

S/o. எஸ். சுந்தரம் 5/43, தேனீர்குளம்

ஒன்றாம் உற்சவம்

வைகாசி மாதம் 17 ஆம் தேதி (31-05-2025) சனிக்கிழமை

காலை 7:45 மணிக்கு மேல் 8:15 மணிக்குள்

மிதுன லக்கனத்தில்

துவஜாரோஹனம்

ஸ்ரீ அஹோபில மடத்தில்விடாயாற்று மண்டகப்படி

திருக்குறுங்குடி மண்டபத்தில் மண்டகப்படி

திருமஞ்சனம் கோஷ்டி

மாலை 6:00 மணிக்கு

இந்திர விமானம்

திருவிழா சிறப்பு உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ அஹோபிலமடம் ஜீயர் ஸ்வாமிகள்

திருவிழா உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ அஹோபிலமடம் ஜீயர் ஸ்வாமிகள்

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள்

இரண்டாம் உற்சவம்

வைகாசி மாதம் 18 ஆம் தேதி (01-06-2025) ஞாயிற்றுக்கிழமை

காலை 6:30 மணிக்கு திருவீதி புறப்பாடு

திருக்குறுங்குடி மடத்தில் **திருமஞ்சனம்**

மாலை 6:00 மணிக்கு

புஷ்ப பல்லக்கு

புஷ்ப பல்லக்கு அலங்கார உபயம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள்

ஸ்ரீமத் ஆத்தான் வடக்கு திருமாளிகை ஆதினம் சிஷ்யர்

வி. ஆர் ரகுநாத அய்யங்கார், சென்னை

திருவிழா உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள்

மூன்றாம் உற்சவம்

வைகாசி மாதம் 19 ஆம் தேதி (02-06-2025) திங்கட்கிழமை

காலை 6:30 மணிக்கு திருவீதி புறப்பாடு

வானமாமலை மடத்தில் விடாயாற்று கிளி குறட்டில்

திருமஞ்சனம் கோஷ்டி

கட்டளைதாரர்

D. வெங்கடாசலபதி & பிரதர்ஸ் அட்வகேட், ஆழ்வை

(திருமஞ்சனம் மட்டும்)

மாலை 6:00 மணிக்கு

புன்னைமர வாஹனம்

திருவிழா உபயதாரர்

திரு. பி. ஆர். சேஷாத்ரிராமன், சென்னை

நான்காம் உற்சவம்

வைகாசி மாதம் 20 ஆம் தேதி (03-06-2025) செவ்வாய்க்கிழமை



காலை 6:30 மணிக்கு திருவீதி புறப்பாடு

கிளி குறட்டில்

திருமஞ்சனம் கோஷ்டி

கோஷ்டி வகையறா உபயம்

R. சங்கர்பாபு, ஹோட்டல் ஆர்யாஸ் குரூப்ஸ்,

வண்ணார்பேட்டை, நெல்லை

மாலை 6:00 மணிக்கு

தங்கத் திருப்புளி வாஹனம்

திருவிழா சிறப்பு உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள்

திருவிழா உபயதாரர்

திருக்கோளூர், திரு. எஸ். வைத்தமாநிதி பெருமாள்

S/o. திரு. சண்முகசுந்தரக் கோனார் குடும்பத்தார்

பி. வி. நரசிம்மலு, சென்னை

ஐந்தாம் உற்சவம்

வைகாசி மாதம் 21 ஆம் தேதி (04-06-2025) புதன்கிழமை

ஸ்வாமி நம்மாழ்வார் மங்களாசாஸனம்

(பூப்பந்தல் மண்டபம்)

நவதிருப்பதி எம்பெருமான்கள், ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ மதுரகவியாழ்வார்



நவதிருப்பதி எம்பெருமான்கள் எழுந்தருளி, பூப்பந்தலில்

ஸ்ரீ நம்மாழ்வார் மங்களாசாஸனம்,

உத்திராதி மடத்தில் விடாயாற்று, பந்தல் மண்டபக் குறட்டில்

திருமஞ்சனம் கோஷ்டி

உபயம்

வைணவ உத்திராதி மடம், ஆழ்வை

வைகாசி மாதம் 21 ஆம் தேதி (04-06-2025) புதன்கிழமை

இரவு

ஒன்பது கருட ஸேவை

நவதிருப்பதி எம்பெருமான்கள்,

ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ மதுரகவியாழ்வார்

திருவிழா உபயதாரர்

ஸ்ரீ நம்மாழ்வார் யாதவர் 5ம் உற்சவ பஜனை

ததீயாராதனை கைங்கர்ய கமிட்டியார்

(ஸ்ரீ பொலிந்துநின்றபிரான் கருட ஸேவை,

ஸ்ரீ நம்மாழ்வார் ஹம்ஸ வாஹனம் மட்டும்)

ஆறாம் உற்சவம்

வைகாசி மாதம் 22 ஆம் தேதி (05-06-2025) வியாழக்கிழமை

மாலை தண்டியலில் திருவீதி புறப்பாடு

ஸ்ரீ பராங்குச மண்டபத்தில் **திருமஞ்சனம் கோஷ்டி**

மாலை 6:00 மணிக்கு

யானை வாஹனம்

திருவிழா உபயதாரர்

(லேட்) வள்ளல் திரு. பி. முத்துசுவாமி யாதவ்

அவர்களின் பேரன்

திரு. T. சத்தியநாராயணன்

ஏழாம் உற்சவம்

வைகாசி மாதம் 23 ஆம் தேதி (06-06-2025) வெள்ளிக்கிழமை

காலை 6:30 மணிக்கு திருவீதி புறப்பாடு

ஸ்ரீ உடையவர் ஸன்னதிக்கு எழுந்தருளி

ஸ்ரீ நம்மாழ்வார் ஸேர்த்தி **திருமஞ்சனம் கோஷ்டி**

மாலை திருவீதி புறப்பாடு

மாலை 6:00 மணிக்கு

வெள்ளி சந்திர ப்ரபை

திருவிழா சிறப்பு உபயம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகள்

திருவிழா உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகள்

காரிமாறன் கலைக்காப்பகம், சென்னை

எட்டாம் உற்சவம்

வைகாசி மாதம் 24 ஆம் தேதி (07-06-2025) சனிக்கிழமை

காலை 6:30 மணிக்கு அப்பன் ஸன்னதிக்கு எழுந்தருளல்

மாலை தவழ்ந்த க்ருஷ்ணன் திருக்கோலம்

இரவு திருக்கோயிலுக்கு எழுந்தருளல்

இரவு குதிரை வாஹனத்தில் 8:40 மணிக்கு மேல் 9:10 மணிக்குள்

தனுசு லக்னத்தில் திருத்தேர் கடாக்ஷம்

குதிரை வாஹனம்

திருவிழா சிறப்பு உபயம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்,

நான்குநேரி

திருவிழா உபயதாரர்

திரு. டி. எஸ். கோவர்த்தன இராமானுஜம், ஆழ்வார்திருநகரி

ஒன்பதாம் உற்சவம்

வைகாசி மாதம் 25 ஆம் தேதி (08-06-2025) ஞாயிற்றுக்கிழமை

கோரதம் காலை 6:30 மணிக்கு மேல் 7:15 மணிக்குள்

திருத்தேருக்கு ஸ்வாமி நம்மாழ்வார் எழுந்தருளி

தேரோட்டம்

கூரத்தாழ்வார் ஸன்னதிக்கு எழுந்தருளி மங்களாசாசனம் கோஷ்டி

திருவிழா உபயதாரர்

ஸ்ரீ மத் ஆத்தான் கீழத்திருமாளிகை ஸ்வாமிகள்

மாலை 4:00 மணிக்கு

ஸ்ரீ வைஷ்ணவ உத்திராதி மடத்தில்

திருமஞ்சனம் கோஷ்டி

மாலை 6:00 மணிக்கு

தவழ்ந்த க்ருஷ்ணன் திருக்கோலம்

திருவிழா உபயதாரர்

ஸ்ரீ வைஷ்ணவ உத்திராதி மடம், ஆழ்வார்திருநகரி

பத்தாம் உற்சவம்

வைகாசி மாதம் 26 ஆம் தேதி (09-06-2025) திங்கட்கிழமை

காலை 6:30 மணிக்கு மாடவீதி புறப்பாடு

சிங்கப்பெருமாள் ஸன்னதியில் **திருமஞ்சனம்**

காலை 9:00 மணிக்கு தாமிரபரணி நதியில் தீர்த்தவாரி,

சன்னதிக்கு எழுந்தருளி அட்சதை, ஆசிர்வாதம்,

பெரிய சன்னதிக்கு எழுந்தருளி கோஷ்டி தீர்த்த வினியோகம்

மாலை 6:00 மணிக்கு

வெட்டிவேர் சப்பரம்

வெள்ளி தோளுக்கினியான் ஸ்ரீ பொலிந்துநின்றபிரான்,

ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ உடையவர் கோஷ்டியுடன்

திருவிழா உபயதாரர்

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்,

நான்குநேரி

ஆங்கில தேதி	1200 ஆம் ஆண்டு	திருநாள்	பகல் விடாயாற்று மண்டபம்	வாகனம்	திருநாமம்	உபயதாரர்
10-06-2025	வைகாசி 27 செவ்வாய்க்கிழமை	11-ம்	காலையில் ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்ரீமத் மணவாளமாமுனிகள் சன்னதிக்கு எழுந்தருளி கந்தபொடி உத்சவம், திருமஞ்சனம், கோஷ்டி பல்லக்கில் சன்னதிக்கு எழுந்தருளி ஆஸ்தானம் எழுந்தருளல்	பல்லக்கு	ஸ்ரீ நம்மாழ்வார்	திரு. எல். எஸ். நம்பி ஸ்ரீனிவாசன், ஆழ்வார்திருநகரி
11-06-2025	வைகாசி 28 புதன்கிழமை	12-ம்	விடாயாற்று மண்டகப்படி லட்சுமி சத்திரம் எழுந்தருளல்	பல்லக்கு	ஸ்ரீ நம்மாழ்வார்	லட்சுமண தோப்பு கட்டளைதாரர்கள்
12-06-2025	வைகாசி 29 வியாழக்கிழமை	13-ம்	விடாயாற்று மண்டகப்படி ஸ்ரீ காகுமானிஆதிகேசவலுசெட்டி அறக்கட்டளை சத்திரத்தில் எழுந்தருளல்	பல்லக்கு	ஸ்ரீ நம்மாழ்வார்	ஸ்ரீ காகுமானி ஆதிகேசவனுசெட்டி சாரிட்டிஸ் ராமானுஜ கூடம், ஆழ்வார்திருநகரி
13-06-2025	வைகாசி 30 வெள்ளிக்கிழமை	14-ம்	விடாயாற்று மண்டகப்படி ஸ்ரீ அஹோபிலமடம் ஆழ்வார்திருநகரி	பல்லக்கு	ஸ்ரீ நம்மாழ்வார்	ஸ்ரீமத் பரமஹம்ஸ அஹோபிலமடம் ஜீயர் ஸ்வாமிகள்
14-06-2025	வைகாசி 31 சனிக்கிழமை	15-ம்	விடாயாற்று மண்டகப்படி ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம், ஆழ்வார்திருநகரி	பல்லக்கு	ஸ்ரீ நம்மாழ்வார்	ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசிகன் ஸ்வாமி

பத்திரிக்கை உபயம்

ஸ்ரீமத் ஆத்தான் கீழத்திருமாளிகை ஸ்வாமிகள்

ஆழ்வார்திருநகரி

மூலவர் திருமஞ்சன வழிபாடு

திருக்கோவிலில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மூலவர் திருமஞ்சனத்தில் அனைவரும் பங்கேற்கும் வகையில் திருமஞ்சன வழிபாடு நடைபெறுகிறது.

	நட்சத்திரம்	கட்டணம்
1. ஆதிநாதர் திருமஞ்சனம்	உத்திரம்	ரூ. 10,000.00
2. நம்மாழ்வார் திருமஞ்சனம்	விசாகம்	ரூ. 7,500.00
3. பட்சிராஜர் திருமஞ்சனம்	சுவாதி	ரூ. 5,000.00
4. தாயார் திருமஞ்சனம்	வெள்ளிக்கிழமை	ரூ. 1,000.00

நித்திய ஆராதனை கட்டளை

ரூ. 20,000/- செலுத்தி பக்தர்கள் தாங்கள் விரும்பும் தினத்தில் தங்கள் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிறந்தநாள், திருமணநாள் போன்ற விசேஷ நாட்களில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து மாலை, வஸ்திரம் முதலானவற்றுடன் அன்றைய தினம் பெருமாளுக்கு அமுது செய்வித்த முழு பிரசாதத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

நன்கொடைக்கான வங்கி விபரங்கள்
A\M ATHINATHARALWARTIRUKOIL
A/C.No. 535489231, IFSC CODE : IDIB00A094
இந்தியன் வங்கி, ஆழ்வார்திருநகரி

ஸ்ரீமதே ஆதிநாதாய நம

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் உத்தரவுபடி இத்திருக்கோவிலில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் அன்னதான திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் நாளொன்றுக்கு 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. 50நபர்களுக்கு ரூ. 2500/- செலுத்தியும், கட்டளைதாரராக (தாங்கள் விரும்பும் நாளில்) ரூ. 25,000/- வைப்புநிதி செலுத்தியும், அன்னதான திட்டத்தில் சேர்ந்து பங்குபெற வேண்டுகிறோம்.

இத்திட்டத்திற்கு வருமானவரி விலக்கு 80G ன்படி
(C.No.464/70/11-12/CIT-1 Date : 01/03/2012)
பெறப்பட்டுள்ளது.

நன்கொடைக்கான வங்கி விபரங்கள் :

ADMINISTRATOR ANNATHANAM
A/C.No. 535499329, IFSC CODE : IDIB00A094
INDIAN BANK, ALWARTHIRUNAGARI